கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 05.12.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக களை விஞ்ஞானிக்கு முன்னவர் விருது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உழவியல் பேராசிரியர் முனைவர் ப.முரளி அர்த்தநாரி அவர்களுக்கு இந்திய களை அறிவியல் சங்கத்தின் முன்னவர் விருது வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் நடந்த தேசிய களை அறிவியல் மாநாட்டில் வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதானது முனைவார்.ப.முரளி அர்த்தநாரியின் களை மேலாண்மைப் பற்றிய ஆராய்ச்சிக்காவும் பயிர்களில் களை மேலாண்மை தொழில்நுட்பங்கள் உருவாக்கியதற்காகவும் மற்றும் 79 களை மேலாண்மை பற்றிய ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பித்தற்காவும் வழங்கப்பட்டது. மேலும், முனைவர்.ப.முரளி அர்த்தநாரி அவர்கள் வேளாண் பயிர்களான, தானியப்பயிர்கள், பயிர்வகைப்பயிர்கள், எண்வித்துபயிர்கள், நார்பயிர்கள் மற்றும் சர்க்கரைப்பயிர்களுக்கு ஒருங்கிணைந்த களை மேலாண்மைத்தொழில்நுட்பங்களும், ஆளில்லா விமானங்களின் மூலம் பயிர்களில் களை முளைப்பதற்கு முன்னும் களை முளைத்த பின்னும் களைகொல்லிகளை தெளிப்பது பற்றிய ஆராய்ச்சி மேற்கொண்டு அதன் முடிவுகள் இந்திய நாட்டிற்கு ஒரு முன்னோடி கண்டுபிடிப்பாக விளங்கி வருகிறது.

முனைவர்.ப.முரளி அர்த்தநாரி அவர்கள், களை மேலாண்மையில் பதினொன்று முதுநிலை மற்றும் இரண்டு முனைவர் பட்டபடிப்பு மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். இவருடைய மாணாக்கர்கள் இந்திய அரசாங்கத்தின் அறிவியல் தொழில்நுட்பத்துறையிடமிருந்து ஆராய்ச்சி உதவி தொகையை (INSPIRE Fellowship) ஒவ்வொரு மாதமும் பெற்று வருகின்றனர். இவருடைய ஆராய்ச்சி கட்டுரைகள் பல பன்னாட்டு மற்றும் இந்திய அளவிலான அறிவியல் மாநாட்டுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவருடைய களை மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் பல வேளாண்பெருமக்களுக்கு பயனுள்ளதாக உள்ளது.

இவ்விருதானது ராணி லக்சுமிபாய் மத்திய பல்கலைக்கழக வேந்தர் முனைவர்.பஞ்சாப்சிங், மற்றும் புதுதில்லி இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக துணைபொது இயக்குநர் முனைவர்.சௌத்திர் இணைந்து வழங்கினர். அவ்வமயம், ஜபல்பூர் இந்திய களை அறிவியல் சங்க இயக்குநர் மற்றும் தலைவர் முனைவர் மிஸ்ரா அவர்களும், பன்னாட்டு களை அறிவியல் சங்க தலைவர் முனைவர்.சமுந்தர் சிங் அவர்களும், வாரணாசி பனாரஸ் இந்து பல்கலைக்கழக வேளாண் புல முதல்வர் முனைவர். சிங் ஆகியோர் உடன் இருந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**